திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விதிகளைப் படித்தார்கள். அழகாகத்தான் இருக்கின்றன. அந்த விதிகள் எல்லாம் இருந்தாலும் கூட அடிக்கடி சென்னை நகரத்திலே இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படுவதாக செய்திகளைப் பார்க்கிறோம். மேல் அதிகாரிகள் தான் தவறு செய்திருக்கிறார்கள் என்ற மாதிரியாக வரும். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது இந்த விதிமுறைகளை யெல்லாம் கட்டாயமாக அமல்படுத்துகின்ற முறையிலே தவறுக்குக் காரணமானவர்கள் பொறுப்பேற்கின்ற வகையிலே ஏற்பாடு செய்யப்படுமா என்பதோடு இந்த மாஸ்க் முதலியவைகளை அணிந்து கொண்டுதான் அந்தப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று கட்டாயமாக்குவதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அடிக்கடி ஒன்றும் நடக்கவில்லை. இதையே அடிக்கடி என்று சொல்வார்கள்போல் இருக்கிறது. விதிகள் போடுவது எல்லாம் கட்டுப்பட்டு நடப்பதற்குத்தான் போடப்பட்டிருக்கிறது. ஒரு சில இடங்களிலே இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது. இனி கடுமையான நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இரண்டு தொழிலாளர்கள் கேஷுவல் தொழிலாளர்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் எவ்வளவு காலமாக கேஷுவல் லேபராக இருந்தார்கள் ? நீண்ட காலமாக கேஷுவல் லேபராக இருந்தால் அவர்களுக்கு விசேஷ உதவிகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முன்னாலேயே சொன்னேன். எவ்வளவு காலம் என்ற தகவல் இல்லை. பல்வேறு உதவிகள் செய்யவேண்டுமென்ற முறையிலேதான் அவர்கள் ஒவ்வொருவருக்கும் 1,000 ரூபாய் 1,000, ரூபாய் என்று அளித்திருக்கிறோம். அவருடைய துணைவியாருக்கு நிரந்தர வேலை கொடுத்திருக்கிறோம். கிட்டத்தட்ட 200 ரூபாய்க்கு மேல் சம்பளம் கிடைக்கக்கூடிய முறையில் உதவி செய்திருக்கிறோம்.

FOREST BASED INDUSTRIES.

*615 Q.— THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state the progress made so far in the introduction of the scheme "Economic plantations" to meet the growing raw material requirements of forest based industries ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : காடுபடு பொருள்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்கு மூலப் பொருள்களின் தேவைகளைப் பெருமளவில் நிறைவு செய்வதற்காக, ஐந்து ஆண்டுத் திட்டங்களின் கீழ் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மலைத் தோட்டப்பயிர்களை வனத்துறை வைத்துப் பயிரிட்டு வருகிறது. இதுவரையிலும் 84,622 ஏக்கர்கள் பயிரிடப்பட்டிருக்கின்றன.

திரு. என். கே. பழனிசாமி : நீலகிரியில் நடுவட்டம் பகுதியிலே ஐஸ் கிரீமிற்குத் தேவையான வனிலா எஸ்ஸன்ஸ், பப்பர்மின்ட் எஸ்ஸன்ஸ் எல்லாம் குறைந்த அளவிலேதான் செய்யப்படுகிறது. 5 ஆயிரம் ஏக்கர் பாரஸ்ட் லேண்ட் ஆக இருந்தாலும் இன்னும் அதிகப்படி செய்தால்தான் பாரின் எக்சேஞ்ச் மிச்சமாகும். ஆகவே அதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ? அதோடு மத்திய சர்க்கார் பாரஸ்ட் லெவலை இன்க்ரீஸ் செய்யவேண்டுமென்று ஏதாவது சொல்லியிருக்கிறார்களா? இந்த அடிப்படையிலே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையிலே காட்டு வளத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் நிதிஒதுக்கீடு செய்யப்படுகிறது. அந்த அடிப்படையிலே ஒவ்வொரு ஆண்டும் வளர்த்ததன் விளைவாக 84,622 ஏக்கர் நிலம் வளர்க்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் 5 ஆயிரம் ஏக்கர் அளவிற்கு வளர்ப்பதற்குத் திட்டம் இருக்கிறது. இதுபோன்ற சாத்தியக்கூறுகள் இருக்கிற இடங்களைப் பரிசீலனை செய்து எடுத்துக்கொள்வது நல்லதுதான்.

MODERN SLAUGHTER HOUSE.

*616 Q. THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state the present stage of the proposal to set up a modern slaughter house in Tamil Nadu with Central assistance ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இது குறித்து செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும்? எந்த முறையில் அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மத்திய அரசு வேளாண்மைத் துறை அமைச்சரிடமிருந்து ஒரு பரிந்துரை நமக்கு வந்தது. அதைப் பரிசீலனை செய்து மத்திய அரசும் இதிலே பங்குதாரராக இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது, அதோடு மாநில அரசு, கார்ப்பரேஷன் மூன்றும் சேர்ந்து நடத்தலாம் என்ற குறிப்பு இருக்கிறது. பங்குதாரர் ஆன பிறகு வங்கியிலிருந்து மூலதனம் பெறலாம் என்று மத்திய அரசிடமிருந்து செயற் குறிப்பு வந்திருக்கிறது. மீட் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் என்ற முறையில் தனி அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார், அவர் அறிக்கை கொடுத்து இருக்கிறார், அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. முதல் கட்டமாக இரண்டு கோடி ரூபாய் இருந்தால்தான் நவீன முறையில் இதை செய்ய முடியும் என்று குறிப்பிலே காணப்படுகிறது.